நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

**முன்னிலை- திருமதி. ஞா. லிசி, B.A.B.L, (Hons), M.L.,**

நீதித்துறை நடுவர், திருவாரூர்

2026-ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 6-ம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.378/2025**

**CNR No:TNTV02-002325-2025**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,

திருவாரூர் தாலுக்கா காவல் நிலையம்,

குற்ற எண் 551/2023

இ.த.ச -சட்டப் பிரிவுகள் 294(b), 352, 506(2) ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

A1) இளவரசன், வயது 24/2023,

த/பெ. இளங்கோவன்,

மேல தெரு, மாவூர்,திருவாரூர்.

A2)இளங்கோவன், வயது 53/2023,

த/பெ.தங்கவேல்,

மேல தெரு, மாவூர், திருவாரூர் .....எதிரிகள்

| | | |
|---|---|---|
| எதிரிகளின் பதில் | | குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் தீர்மானம் | | எதிரிகள் மீதான இதச சட்டப்பிரிவு 294(b), 352, 506(2)-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை. |
| தண்டனை அல்லது உத்தரவு | | **முடிவாக,** எதிரிகள் மீது இ.த.ச சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(2)-ன் கீழான குற்றச்சாட்டிலிருந்து எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் கீழ் எதிரிகளை |

| | | |
|---|---|---|
| | | விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் தானாக ரத்தாக வேண்டியது. இவ்வழக்கில் தடயப்பொருட்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. |

இந்த வழக்கு 24.09.2025 ஆம் நாளன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசின் சார்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 திரு.E.இளஞ்செழியன், அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.தியாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்.......

## தீர்ப்புரை

திருவாருர் தாலுக்கா மாவூர் மேலதெரு சாட்சி 1 பாண்டியன் வீட்டின் வாசல் முன்பு எதிரியான 1 இளவரசன் சாட்சி 1 னிடம் இருசக்கர வாகனம் கேட்க சாட்சி 1 தரமறுத்ததால் எதிரி 1 இளவரசன் சாட்சி 1 ஐ பார்த்து ஏய் குச்சிகாரி மொவனே தேவடியா மொவனே எனக்கா வண்டி தரமாட்டுங்குர என அசிங்கமாக திட்டி சென்ற பின்னர் மீண்டும் 23.08.2023 ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் சாட்சி 1 ன் வீட்டின் வாசல் முன்பு எதிரி 1 ன் தந்தையான எதிரி 2 இளங்கோவன் இருவரும் சேர்ந்து சாட்சி 1 ஐ குச்சிகாரி கொவனே தேவடியா மொவனே வெளியே வாடா என திட்டி வெளியே வந்த சாட்சி 1 ஐ பார்த்து எப்படி வண்டி இல்லைனு சொன்ன என திட்டி கையால் முகத்திலும், முதுவிலும் குத்தியும் எதிரிகள் இருவரும் வேலியில் இருந்த கட்டையை உருவி உன்னை கொன்னுபுட்டுதான்டா மறுவேளை பார்ப்பேன் என்று மிரட்டி குற்றம் புரிந்துள்ளதாக 1 வது எதிரியின் செய்கையானது இ.த.ச சட்டப்பிரிவுகள் 294(b), 352, 506(2) -ன் படியும், 2 வது எதிரியின் செய்கையானது இ.த.ச சட்டப்பிரிவுகள் 294(b), 506(2) -ன் படியும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்த வழக்கின் எதிரிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவர்களுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3) குற்றப்பத்திரிக்கையில் எதிரிகளின்ன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து, இரு தரப்புக்கும் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, இரு தரப்பையும் கேட்டும், எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை குறித்து ஆவணங்களைப் பரிசீலனை செய்த வகையில் 1வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(2)-ன் கீழும், 2 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b), 506(2)-ன் கீழும் குற்ற செயல்களை செய்திருக்கலாம் என்பதற்கான முதற்நோக்கு சாத்தியக்கூறுகள் இருந்ததால் மேற்படி குற்றச்சாட்டுக்கள் குறித்து குவிமுச பிரிவு 240-ன் படி எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் விளக்கி வினவியபோது அதை எதிரிகள் மறுத்து, எதிர்வாதம் செய்வதாக கூறி சாட்சிகளின் விசாரணைக்கு வேண்டியதன் அடிப்படையில் அரசுத் தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, விசாரணை தொடங்கப்பட்டது.

4) குற்றப்பத்திரிக்கையில் கண்ட சாட்சிகளின் பட்டியலிடப்பட்ட சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ 6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக கருதப்பட்ட சாட்சியங்களை தொகுத்து கு.வி.மு.ச .பிரிவு 313 (1) (பி) பிரிவின் கீழ் விளக்கி வினவிய போது எதிரிகள் அவற்றை பொய் என மறுத்துரைத்துள்ளார். எதிரிகள் தமது தரப்பில் சாட்சி இல்லை என தெரிவித்துள்ளார்.

6) இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், 1 வது எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 352, 506(2)-ன் படியும், 2 வது எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 506(2)-ன் படியான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில்

நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**7) தீர்வு:**

கடந்த 23.08.2023 ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் சாட்சி-1ன் வீட்டின் வாசல் முன்பு எதிரி-1 ன் தந்தையான எதிரி-2 இளங்கோவன் இருவரும் சேர்ந்து சாட்சி 1-ஐ குச்சிகாரி மொவனே தேவடியா மொவனே வெளியே வாடா என திட்டி வெளியே வந்த சாட்சி 1-ஐ பார்த்து எதிரி -1 எப்படி வண்டி இல்லன்னு சொன்னே என திட்டிகையால் முகத்திலும் முதுவிலும் குத்தி எதிரிகள் இருவரும் வேலியிருல் இருந்த கட்டையை உருவி உன்னை கொன்னுபுட்டு தான்டா மறுவேளை பார்ப்பேன் என கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது,

8) இந்நீதிமன்றத்தில் முதல்நிலைபுகார்தாரரான அ.சா.1 பாண்டியன் நீதிமன்ற முதல் விசாரணையில் தான் தற்போது மாவூரில் வசித்து டிரைவராக வேலை செய்து வருவதாகவும், 2023 ம் வருடம் 8 வது மாதம் தேதி ஞாபகம் இல்லை என்றும், இரவு 10.00 மணியளவில் தான் தனது வீட்டு வாசலில் நின்றுக்கொண்டிருந்ததாகவும், தெருவில் ஒரே கூட்டமாக சண்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், தான் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த ஒரு நபர் தன்னை பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும், யார் என்று தனக்கு தெரியாது என்றும், கூட்டத்தில் எதிரிகள் இருந்ததால் சந்தேகத்தின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக போலிசாரிடம் புகார் மனு கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுள்ளது.

9) இந்நீதிமன்றத்தில் தலைமை காவலர் சாட்சியான அ.சா.2 திரு.ஞானசேகரன் நீதிமன்ற முதல் விசாரணையில் கடந்த 24.09.2023 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய மனு எண்.660/2023 என பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு 27.09.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு நிலைய குற்ற எண். 551/2023 சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(2) இ.த.ச. -வின்

படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் என்றும், தன்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 ன் மூலம் **அ.சா.1 கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுள்ளது.**

10)அரசு தரப்பில் புலன்விசாரணை அதிகாரியான சிறப்பு உதவி ஆய்வாளர் சாட்சியான அ.சா.3 கிருஷ்ணகுமார் தனது நீதிமன்ற முதல் விசாரணையில் நான் தற்போது திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறனே் என்றும், இவ்வழக்கில் விசாரணை அதிகாரி ராஜகோபால் அவர்களை தெரியும் என்றும், அவருடைய கையெழுத்து மற்றும் கையொப்பத்தை தான் அறிவேன் என்றும், இவ்வழக்கின் முக்கிய சாட்சிகள்அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளதாலும், விரைவு விசாரணை, வழக்கின் காலதாமதம் மற்றும் நீதியின் நலன் கருதி சட்டப்பிரிவு 311 கு.வி.மு.ச. மற்றும் சட்டப்பிரிவு 348 BNSS -ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு ஆட்சேபனை இல்லை என கூறப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் தான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியமளிக்கிறேன் என்றும், உதவி ஆய்வாளர் ராஜகோபால் 24.09.2023 ம் தேதி திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது குற்ற எண். 505/2023 வழக்கினை அவரது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 27.08.2023 ம் தேதி காலை 11.00 மணிக்கு சம்பவ இடம்சென்று சாட்சிகளை விசாரித்து பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சம்பவம் உண்மையென தெரியவரவே இவ்வழக்கின் எதிரிகளை தேடிய நிலையில் எதிரி இளங்கோவனை கைது செய்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தியுள்ளார் என்றும், மற்றொரு எதிரி முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார் என்றும், இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 ன் மூலம் **அந்த பார்வை**

**மகசர் அ.சா.ஆ. 5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுள்ளது.** அ.சா.3 தனது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்"அ.சா.1 கொடுத்த புகாரினை சரிவர விசாரணை செய்யாமலும், நான் சொல்வது போல் சொன்ன இடத்திற்கு சொன்ன நேரத்திற்கு செல்லாமல் வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு, சரிவர புலன்விசாரணை செய்யாமல் வழக்கின் எதிரிகள் மீது பொய்யான வழக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல "என்று பதில் அளித்துள்ளார்.

11) மேற்கண்ட சாட்சியங்களின் பரிசீலனையிலிருந்து இந்நீதிமன்றம் கருதுவது யாதெனில் புகார்தாரரான அ.சா.1 தான் அளித்த புகார் வாக்குமூலத்தை ஒத்து இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் 23.08.2023 ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் அ.சா.1 வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த போது அ.சா.1ன் தெருவை சேர்ந்த இளங்கோவன் என்பவர் மகன் இளவரசன் அ.சா.1 யிடம் இருசக்கர வாகனத்தை இரவளாக கேட்டபோது அதிகமான மது போதையில் இருந்ததால் அ.சா.1 தனது வண்டியை தர முடியாது எனசொன்னதால் இளவரசன் அ.சா.1 ஐ பார்த்து ஏய் குச்சிகாரி மொவனே தேவடியா மொவனே எனக்கா வண்டி தரமாட்டுங்குர என அசிங்கமாக திட்டியும் இளங்கோவனுடன் வந்த அவரது அப்பா இருவரும் மீண்டும் வீட்டு வாசலில் நின்று குச்சிகாரி மொவனே தேவடியா மொவனே வெளியே வாடா என திட்டியும், அ.சா.1 கேட்டதற்கு இளவரசன் அ.சா.1 ஐ பார்த்து தனக்கு எப்படி வண்டி இல்லன்னு சொன்னே என திட்டி கையால் முகத்திலும், முதுகிலும் குத்தியும், அருகில் வேலியில் இருந்த கட்டையை உருவி உன்னை கொன்னுபுட்டுதான்டா மறுவேளை பார்ப்பேன் என்று மிரட்டினார்கள் என புகார் அளித்து உள்ளார்.

இந்நீதிமன்ற முதல் விசாரணையில் மேற்கண்ட உண்மையை மறைத்து முதல் நிலை புகார்தாரரான அ.சா.1 2023 ம் வருடம் 8 வது மாதம் தேதி ஞாபகம் இல்லை என்றும், இரவு 10.00 மணியளவில் தான் தனது வீட்டு வாசலில் நின்றுக்கொண்டிருந்ததாகவும், தெருவில் ஒரே கூட்டமாக சண்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், தான் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த ஒரு நபர் தன்னை பிடித்து கீழே தள்ளிவிட்டார்

என்றும், யார் என்று தனக்கு தெரியாது என்றும், கூட்டத்தில் எதிரிகள் இருந்ததால் சந்தேகத்தின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக போலிசாரிடம் புகார் மனு கொடுத்தேன் என முன்னுக்குபின் முரணாக பதில் அளித்துள்ளார். **மேலும் அ.சா.1 தான் எதிரியுடன் பேசி சமரசம் ஆகிவிட்டதாக கூறி 359(8) BNSS படி மனு தாக்கல் செய்துள்ளார்.**

முதல்நிலை புகார்தாரரின் புகார் வாக்குமூலத்தை ஒத்து இந்நீதிமன்றத்தில் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. அ.சா.2 தலைமை காவலர் புகார் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.3 ஆன புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்தில் சாட்சிகளை விசாரணை செய்து மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தது, எதிரிகள் தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என்று தக்க புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 மற்றும் அ.சா.3 ன் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் இருப்பினும் மற்ற சாட்சியான அ.சா.1 முதல்நிலை புகார்தாரர் சாட்சி அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. ஆகவே எதிரிகள் தான் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றத்தை செய்தார்கள் என்று முடிவு செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. இந்த எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(பி), 352, 506(2)-கீழ் இக்குறத்தை செய்தார்கள் என்று கூறப்படுவதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் வகையில் அமையவில்லை என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டியவர்கள் என்று தீர்வு காணப்படுகின்றது.

**12) முடிவாக,** எதிரிகள் மீது இ.த.ச சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(2)-ன் கீழான குற்றச்சாட்டிலிருந்து எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

13) எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் தானாக ரத்தாக வேண்டியது. இவ்வழக்கில் தடயப்பொருட்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணி மூலம் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு இன்று 06.08.2026-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

LISI G

Digitally signed by LISI G
DN: cn=LISI G, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.08.06 15:45:58 +0530

நீதித்துறை நடுவர் ,
திருவாரூர்.

**1.அரசு தரப்பு சாட்சிகள்**

அசா.1 திரு.பாண்டியன்

அசா.2 திரு. ஞானசேகரன்

அசா.3 திரு. கிருஷ்ணகுமார்

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்**

அசா.ஆ.1 புகார் மனுவில் அ.சா.1 ன் கையொப்பம்

அசா.ஆ.2 சமரச மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம்

அசா.ஆ.3 அ.சா.1 கொடுத்த புகார் மனு

அசா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை

அசா.ஆ. 5 பார்வை மகசர்

அசா.ஆ.6 மாதிரி வரைபடம்

**3. அரசு தரப்பு சான்று பொருள்** : இல்லை

4. எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்: இல்லை

LISI G

Digitally signed by LISI G
DN: cn=LISI G, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.08.06 15:45:50 +0530

நீதித்துறை நடுவர் ,
திருவாரூர்.

<u>குறிப்பு</u>

1)வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2)எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

<u>நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது</u>

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

திருவாரூர்.